# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035

தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் - 07.04.2026**

**முன்னிலை**

**திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 14152/F/2023**

திரு. M.P.முருகேசன் .. மேல்முறையீட்டாளர்

/எதிர்/

The Public Information Officer,
Directorate of Motor Vehicle Maintenance,
Velacheri,
Chennai .. பொது அதிகார அமைப்பு

**ஆணை**

இவ்வாணையத்தில் இன்று 07.04.2026 நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு. M.P.முருகேசன் அவர்கள் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுதகவல் அலுவலர் திருமதி.த.யூளினி, துணை இயக்குநர்(நி), மோட்டார் வாகன பராமரிப்புத் துறை, வேளச்சேரி, சென்னை-42 அவர்கள் ஆஜரானார் இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

2. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ், 04/05/2023 தேதியிட்டு தாக்கல் செய்துள்ள மனுவில் தமிழ்நாடு அரசுபணியாளர் தேர்வாணையம் மூலம் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை 2 பதவிக்கு அறிவிக்கை எண்.03/2018ன்படி தனது மனைவி விண்ணப்ப எண்.803000380, மாண்புமிகு உயர்நீதிமன்ற தீர்ப்பின்படி தனது மனைவி வள்ளிமயில் D/O S.பழனிசாமி அவர்களின் பணிமனை அனுபவம் சான்று ARV BODY BUILDERS பூந்தமல்லி சென்னை-56ல் தாங்கள் வெறிபிகேசன் செய்து பெற்ற அதன் காரண முழுகோப்புகளின் ஆவண நகல்கள் என்பன போன்ற 6 இனங்களில் தகவல்களைக் கோரியுள்ளார்.

3. அம்மனுவைப்பெற்ற பொதுத்தகவல் அலுவலர் தகவல் வழங்கவில்லை. எனவே மனுதாரர் தகவல் கிடைக்கவில்லை என தகவல் அறியும் உரிமைச் சட்டம், பிரிவு 19(1)ன் கீழ் 09.06.2023 நாளிட்ட முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலர் 22.06.2023 நாளிட்ட கடிதம் மூலம் தகவல் வழங்கியுள்ளார் இருப்பினும் மனுதாரர் தனக்கு முழுமையான தகவல் கிடைக்கவில்லை என தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 19(3)ன் கீழான 01.08.2023 நாளிட்ட இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை ஆணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தாக்கல் செய்துள்ள அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (07.04.2026) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

4. இன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜரான பொதுதகவல் அலுவலர் மனுதாரர் 6(1) மனுவில் கோரிய இனங்கள் குறித்து 22.06.2023 தேதியிட்ட கடிதம் மூலம் இனம் வாரியாக தகவல்கள் வழங்கப்பட்டிருப்பதாக கூறி ஆணையத்தின் பார்வைக்கு சமர்ப்பித்தார். இன்றைய விசாரணைக்கு ஆஜரான மனுதாரர் மேல்முறையீட்டு அலுவலரால் இனம் 5 மற்றும் 6 ஆகியவற்றிற்கு முழுமையான தகவல் கிடைத்திருப்பதாகவும் 1,2,3,4 ஆகிய இனங்களுக்கு முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை என்றும் முழுமையான தகவல்களைப் பெற்றுத்தருமாறும் ஆணையத்திடம் கோரினார்.

5. இன்றைய விசாரணையில் ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களை பரிசீலனை செய்கையில் இவ்வாணையம் கீழ்காணும் உத்தரவினை பிறப்பிக்கிறது.

- **மனுதாரரின் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் கோரியுள்ள இனம் 1 மற்றும் 2 ஆகியவற்றிற்கு நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளதால் அவற்றை தவிர மற்ற 3 மற்றும் 4 ஆகிய இனங்களுக்கு சரியான முழுமையான தகவல்களை தகவல் அறியும் உரிமைச் சட்டம் பிரிவு 7(6)ன் கீழ் கட்டணம் ஏதுமின்றி தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது என்ற முத்திரையுடன் பொதுத்தகவல் அலுவலர் கையொப்பமிட்டு மனுதாரருக்கு ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பி அதனை மனுதாரர் பெற்று ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் மனுதாரருக்கு வழங்கிய தகவல் ஆகியவற்றை இணைத்து ஒரு அறிக்கையாக தயார் செய்து தற்போதைய பொதுத்தகவல் அலுவலர் 12.05.2026 அன்று**

**இவ்வாணையத்தில் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு ஆணையிடுகிறது.**

**ஓம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 14152/F/2023</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

The Public Information Officer,
Directorate of Motor Vehicle Maintenance,
Velacheri, Chennai- 42.

**<u>மேல்முறையீட்டாளர்:-</u>**

திரு.M.P.Murugesan,
No.L40B, Bharathidasan Colony,
K.K.Nagar,
Chennai-35.

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

Copy to file: KR/PA